## தாவரவியற் பூங்கா நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தாவரவியற் பூங்கா நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

கட்டிடங்களுக்காக கணக்குகளில் பெறுமானத் தேய்விற்கான நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 20,702,460 ஆன கட்டிடத்தின் பெறுமதியினுள் 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 438,391 செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களின் பெறுமதி உள்ளடக்கப்பட்டிருந்தமையால் கட்டிடங்களின் பெறுமதி அப்பெறுமானத்தால் கூடுதலாகவும் உபகரணங்களின் பெறுமதி அப்பெறுமானத்தால் குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2009 முதல் 2012 வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட 05 நிர்மாணங்களுக்குரிய ரூபா 642,307 ஆன நிறுத்தி வைத்தல் தொகை கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன், அந்த நிறுத்தி வைத்தல் தொகையை மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யும் போது ஆண்டின் செலவினமாக வருமானம் மற்றும் செலவினக் கணக்கில் காண்பிக்கப்பட்டதனால் மீளாய்வாண்டின் செலவினம் அப்பெறுமானத்தால் கூடுதலாகவும் நிலையான சொத்துக்கள் அப்பெறுமானத்தால் குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2.3 தீர்த்துவைக்கப்படாத மீதிகள்

2002 ஆம் ஆண்டில் ரூபா 1,364,586 ஆன செலவு செய்யப்பட்டு பேராதனை தாவரவியற் பூங்காவிற்காக அமைக்கப்பட்ட மின்னியக்க நுழைவாயில் உரிய முறையில் செயற்படாததன் காரணமாக 2010 ஆம் ஆண்டின் போது அகற்றப்பட்டிருந்ததுடன், அதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரூபா 330,792 தொகையை கணக்குகளில் இணக்கம் செய்யாமல் 09 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக ஐந்தொகையில் அட்டுறு செலவினமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுகள் ரூபா 66,186,911 மிகையொன்றாக இருந்ததுடன், அதனையொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 74,466,125 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 8,279,214 ஆன குறைவொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நுழைவுச்சீட்டு விற்பனை வருமானம் மற்றும் தொழிற்பாட்டு இலாபங்களின் கூட்டுத்தொகை 82,366,613 இலிருந்து ரூபா 89,186,425 வரை ரூபா 6,819,812 ஆல் அல்லது நூற்றுக்கு 8.28 ஆல் அதிகரித்திருந்த போதும், ஆண்டின் மொத்த மீண்டுவரும் செலவினம் ரூபா 7,900,488 முதல் ரூபா 22,999,513 வரை ரூபா 15,099,025 ஆல் அல்லது நூற்றுக்கு 191.12 ஆல் அதிகரித்தமை நிதிவிளைவுகளின் வீழ்ச்சிக்கு தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### செயலாற்றல்

(அ) பூக்கன்று நடுகை அறிவுறுத்தல் புத்தகங்கள் மற்றும் நாற்றுக்கள் விற்பனை வருமானம் என்பன வருடாந்தம் குறைவடைந்திருந்தன. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | வருமானம் 2012 ரூபா | 2011 ரூபா | 2010 ரூபா |
|---|---|---|---|
| பூக்கன்று நடுகை அறிவுறுத்தல் புத்தகங்கள் விற்பனை | 77,000 | 102,110 | 141,425 |
| நாற்றுக்கள் விற்பனை | 725 | 379,052 | 854,215 |

(ஆ) நிதியத்தின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக நிதியத்தை உருவாக்குவதற்குரிய உடன்படிக்கையின் விசேட நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு வருமானத்தை உழைப்பதற்கு விசேட நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) தாவரவியற் பூங்கா பொறுப்பாண்மை நிதிய உருவாக்க உடன்படிக்கையின் பிரகாரம் தாவரவியற் பூங்காங்களை பார்வையிடுவோரின் வசதிக்காக தேவையான வசதிகள் வழங்குவதற்குவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தன. எனினும் பேராதனை தாவரவியற் பூங்காவின் நீர் வசதிகளை மேம்படுத்துவதற்காக 2 நீர்த்தாங்கிகளை நிர்மாணிப்பதற்கு 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 1,000,000 தொகை மத்திய மாகாண கட்டிடத் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2013 ஏப்ரல் 04 ஆம் திகதி வரையில் குறித்த செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஹக்கல தாவரவியற் பூங்காவின் உள்ளக குறுக்கு வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 2012 ஒக்தோபர் மாதத்தின் போது ரூபா 405,500 செலவு செய்து 10,000 கொங்கிரீட் கற்கள் உட்பட பல்வேறு கட்டிடப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு பூங்காவினுள் சேகரித்து வைக்கப்பட்டிருந்த போதும், 2013 மார்ச் மாதம் வரையில் உரிய செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 கணக்கேடுகளைப் பராமரித்தல்

பூக்கன்று நடுகை அறிவுறுத்தல் புத்தகங்கள், வழிகாட்டிப் பத்திரங்கள் மற்றும் பூக்கன்று நடுகை மற்றும் ஏனைய நாற்றுக்கள் இருப்பு என்பவற்றிற்கான ஆரம்ப இருப்பு மீதி, கொள்வனவு மற்றும் விற்பனை என்பவற்றை காண்பிக்கக்கூடிய வகையில் முறையான இருப்புக் கட்டுப்பாட்டுக் கணக்கு முறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பொறுப்பாண்மைச் சபைக் கூட்டம்

தாவரவியற் பூங்கா பொறுப்பாண்மை நிதிய உருவாக்க உடன்படிக்கையின் 3 (ஜீ) (ை) பந்தியின் பிரகாரம் பொறுப்பாண்மை சபை 03 மாதங்களுக்கு ஒருமுறை கூட்டப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது ஒரு முறை மட்டுமே கூட்டப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் நிதியத்தின் செயலாளருக்கு அவ்வப்போது சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிர்மாணிப்புக்கள்